உ
திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறைத் திருப்பாடல் திரட்டு



தாது ஆண்டு, ஆடித்திங்கள் 25, 26, 27-ஆம் நாட்களில்
(1996-ஆகஸ்டு - 9, 10, 11 - வெள்ளி, சனி, ஞாயிறு)

திருச்சிராப்பள்ளி

அருள்மிகு தாயுமானஈசர் திருக்கோயில்
...ால் மண்டபத்தில் நடைபெற்ற

...நெறிய - தெய்வத்தமிழ்

...ரண்டாம் ஆண்டுப் பண்ணிசை விழாவில்
வெளியிடப்பெற்றது.

வெளியீடு :

திருச்சிராப்பள்ளித் திருமுறைமன்றம்,
61, நடுத்தெரு, வரகனேரி,
திருச்சிராப்பள்ளி-8.

உ

சிவமயம்

பன்னிருதிருமுறைத் திருப்பாடல் திரட்டு

திருக்கயிலாயபரம்பரைத் திருத்தருமபுரம் ஆதீனம்
26-வது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
அவர்களால்

பன்னிருதிருமுறை இரண்டாம் ஆண்டுப்
பண்ணிசைவிழா நிறைவு நாளன்று
11—8—1996
வெளியிடப்பெற்றது.

நூல் வெளியிடப் பொருளுதவி செய்த புண்ணியர்கள் :

1. திரு. G. சுப்பிரமணியம், திரு. G. பொன்னுசாமி,
ஈஸ்வரி சில்க்ஸ், சிங்காரத்தோப்பு,
திருச்சிராப்பள்ளி-8.

2. திரு. தா. ப. இராஜேந்திரன்,
பிள்ளையார்கோயில் தெரு,
வரகனேரி, திருச்சி-8.

உ

திருச்சிற்றம்பலம்

பன்னிரு திருமுறைத் திருப்பாடல் திரட்டு

தாது ஆண்டு, ஆடித்திங்கள், 25, 26, 27ஆம் நாட்களில்
(1996 ஆகஸ்ட் – 9,10,11 – வெள்ளி, சனி, ஞாயிறு)

திருச்சிராப்பள்ளி

அருள்மிகு தாயுமானஈசர் திருக்கோயில்

நூற்றுக்கால் மண்டபத்தில் நடைபெற்ற

திருநெறிய – தெய்வத்தமிழ்

பன்னிருதிருமுறை

இரண்டாம் ஆண்டுப் பண்ணிசை விழாவில்

வெளியிடப்பெற்றது.

வெளியீடு:

திருச்சிராப்பள்ளித் திருமுறைமன்றம்,

61, நடுத்தெரு, வரகனேரி,

திருச்சிராப்பள்ளி – 8

திருச்சிராப்பள்ளித் திருமுறைமன்றம்,

61, நடுத்தெரு, வரகனேரி,

திருச்சிராப்பள்ளி – 8

தலைவர்

திருமுறைக்காவலர் – சிவநெறிப்புரவலர்
சிவத்திரு **ப. மூக்கப்பிள்ளை** அவர்கள்

துணைத்தலைவர்கள்

தி.ச. வைத்திலிங்கம்பிள்ளை
கே. சிங்காரம்பிள்ளை

செயலாளர்

ந. சிவப்பிரகாசம், பி.காம்.,

பொருளாளர்

தி.ச. காத்தப்பெருமாள்பிள்ளை

துணைச்செயலாளர்

என். சதாசிவம்

மற்றும்

ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

1/4

திருப்பாடல் திரட்டுப் பதிப்புரை

புலவர்மணி மு. வைத்தியநாதன் அவர்கள்

தமிழ்மக்கள் செய்த தவப்பயனால் தமிழ்நாட்டில் தோன்றியவர்கள் திருமுறையாசிரியர்கள் இருபத்தேழுபேர்.

திருமூலர், காரைக்காலம்மையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், திருவிசைப்பா ஆசிரியர்கள், பட்டினத்தடிகள், நம்பியாண்டார்நம்பி, சேக்கிழாரடிகள் ஆகியோர் நமக்கு வகுத்து வழிகாட்டிய நெறியே திருநெறியாகும்.

அருளாசிரியர்களாகிய அவர்கள் திருவாய் மலர்ந்தருளிய தெய்வத்தமிழ்ப் பாடல்கள், திருநெறியத்தமிழ் எனவும், திருமுறை எனவும் வழங்கப்பெறும்.

திருமுறைப்பாடல்கள், சிவபரம்பொருளது, பொருள்சேர் புகழையும், அப்பரம்பொருள், தன் அடியார்கட்கு, அருள்புரிந்த திறத்தையும் விளக்குவனவாம்.

திருமுறைகள் பன்னிரண்டினையும், முறைப்படிக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுதலும் பிறரை ஓதும்படிச் செய்தலும் பிறர் சொல்லத் தாம் கேட்டலும், பிறரைக் கேட்கும்படித் தூண்டுதலும் ஞான நூல்களாகிய அவைகளின் பொருள்நலன்களை எல்லாம் இடைவிடாமல் சிந்தித்தலும் என ஐந்து வகையாலும் பயின்று வழிபடுதல் வேண்டும். அவ்வாறு வழிபடுவது எழில் ஞான பூசையாகும்.

திருச்சிராப்பள்ளித் திருமுறைமன்றம், கடந்த சில ஆண்டு களாகத் தல முறையாக – பண்முறையாக அல்லாமல் திருமுறையாசிரி யர்கள் சென்று வழிபட்ட வரலாற்று வழிமுறையாகத் திருமுறை முற்றோதல்களைச் செய்து வருகிறது.

இதுவரைச் சற்றொப்ப 60 திருமுறை முற்றோதல் நிகழ்ச்சிகளைத் தானாக ஏற்றுப் போற்றுவோர் இல்லங்களில் நடத்தி முடித்துள்ளது. தொடர்ந்து நடத்தவிருக்கிறது.

திருச்சிராப்பள்ளியிலும், நகரைச் சார்ந்த ஊர்களிலும் வாழும் சைவ நலம் பழுநிய பெருமக்கள், முற்றோதல் நிகழ்ச்சிகளை நடத்தப் பெரிதும் ஆர்வம் காட்டி வருகிறார்கள்.

இந்நிலையில் திருமுறைமன்றம், நிகழும் தாது ஆண்டு ஆடித்திங்கள் 25,26,27 ஆம் (வெள்ளி, சனி, ஞாயிறு) நாட்களில் திருச்சிராப்பள்ளி அருள்மிகு தாயுமானஈசர் திருக்கோயில், நூற்றுக் கால் மண்டபத்தில் திருநெறிய தெய்வத்தமிழ் இன்னிசைப் பெரு விழாவைச் சிறப்புற நடத்தியது.

இருபத்தேழு திருமுறையாசிரியர்கள் நினைவாக இருபத்தேழு புகழ்பெற்ற திருமுறைவாணர்களை அழைத்து, அவர்களைக் கொண்டு, திருமுறைகளை, அவைகளுக்குரிய பண்களில் மட்டும் பாடச் செய்து பெருமை அடைந்தது.

திருமுறை இன்னிசைப் பெருவிழாவில் திருமுறைவாணர் களுக்குப் பொன்னாடை போர்த்தியும், பொற்கிழி வழங்கியும் பெருமை செய்தது.

திருமுறைமன்றத் தலைவர், ***திருமுறைக் காவலர் சிவத்திரு. ப.மூக்கப்பிள்ளை அவர்கள்*** பெருமுயற்சியால் திருமுறை முற்றோதல் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

திருமுறைகளுக்குத் தொண்டு செய்ய வேண்டும் என்னும் பெருங்கருத்துடன் திருநெறிய – தெய்வத்தமிழ் இன்னிசைப் பெருவிழாவைப் பெரும்பொருட் செலவில் நடத்தி முடித்துள்ளார்கள்.

தெய்வத்தமிழ் இன்னிசைப் பெருவிழா நினைவு வெளியீடாகப் 'பன்னிரு திருமுறைத் திருப்பாடல் திரட்டு' என்னும் இந்நூல் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது. சைவநெறி நிற்கும் ஆடவர், மகளிர் அனைவரும் ஓதியுணர்ந்துப் பெரும்பயன் எய்த நம்பெருமான் திருவருள் கூடுவதாக.

1/4

முன்னுரை

பேராசிரியர், முனைவர் கு. சுந்தரமூர்த்தி,
அனைத்துலகச் சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம், தருமபுரம்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே, வாளொடு முன் தோன்றி மூத்தகுடி என வீரத்தின் தொன்மை கூறுவர். இது நம் சைவ சமயத்தின் தோற்றத்திற்கும் பொருந்தும். பண்டைய காலம் முதலே, நம் சைவ சமயத்தின் வழிபடு கடவுளான சிவபெருமானைப் பற்றியும் அப்பெருமான் கல்லால நிழலின் இருந்து அறம் உரைத்த பெற்றியும், ஆனேற்று ஊர்தியில் அமர்ந்தருளிய பெற்றியும் முதலாய பல குறிப்புக்கள் அகழ்வாராய்வுகளாலும், சங்கஇலக்கியக் குறிப்புக் களாலும் அறிய இயலுகின்றது.

இவ்வாறு பரந்தும் விரிந்தும் இருந்த சமயம், சங்ககாலத்தை அடுத்து வந்த களப்பிரர் ஆட்சியால் நலிவுற, மீண்டும் அதனை உயர்த்திய பெருமை நம் பன்னிரு திருமுறைகளுக்கு உண்டு. ஏறத்தாழ கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையிலான காலத்தைத் திருமுறைக்காலம் என்று அழைக்கலாம். இவ்வகையில் ஆயிரம் காலத்துப்பயிராய் நம் திருமுறைகள் வளர்ந்து வந்தமை புலனாகும்.

இத்திருமுறைகள், தோன்றிய காலத்தேயன்றி அவற்றைத் தொடர்ந்தும் அடர்ந்தும் பயின்று வரும் காலந்தோறும் அவற்றின் அருமையும் பயனும் போற்றப்பட்டு வந்துள்ளன. அண்மைக்காலமாகத் தமிழகத்தில் இத்திருமுறைப்பயிற்சி பரவலாக வளர்ந்து வருகின்றது. பண்ணொடு இசைத்துப்பாடும் வகையானும் பொருள்தெரிந்து ஓதி வரும் சிறப்பாலும் சிறப்புற்றும் பயன்பட்டும் வருகின்றன.

இதனை உணர்ந்த நம் திருச்சிராப்பள்ளித் திருமுறைமன்றம் இவ்வுணர்வையும் இவ்வாராய்ச்சியையும் மேலும் தழைக்கச் செய்வதற்காக அரியதொரு விழாவை ஏற்பாடு செய்து, அவ்விழாவில் திருக்கயிலாயபரம்பரைத் திருத்தருமபுர ஆதீனத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களையும், திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதினத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களையும், திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களையும், திருப்பனந்தாளில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி எஜமான் சுவாமிகள் அவர்களையும் எழுந்தருளச் செய்து பண்சுமந்த பாடல்களை முறையாகத் தொடர்ந்து ஓதிவரும் ஓதுவாமூர்த்திகளுக்குப் பரிசு படைத்தருள உளம் கொண்டிருப்பதும்,

அவ்விழாவின் பயனாகப் பன்னிரு திருமுறைத் திரட்டு எனும் பெயரில் அரிய நூல் ஒன்றை வெளியிடுவதும் அறியப் பெருமகிழ்ச்சி தருகிறது.

இவ்வரிய பனுவல் இருபகுதியாக அமைந்துள்ளது. முதற் பகுதியில் பன்னிரு திருமுறைகளில் காணும் அரிய பல பாடல்களைத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளது. இரண்டாவது பகுதியில் கல்வி, செல்வம், பத்திமை, வாழ்நாள் முதலிய அனைத்து நலன்களும் தழைய நாளும் ஓதி வருவதற்கு ஏற்ற முறையில் அவற்றிற்குரிய பாடல்களைத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. இம்மைக்கும், மறுமைக்கும் வருத்தம் வந்து அடையாதவாறு காக்கவும், பாசநீக்கமும் சிவப்பேறும் தழையவும் இந்நூல் பெரிதும் பயன்படுவதாகும்.

திருச்சிராப்பள்ளியில் இத்திருமுறைமன்றம் தோன்றிய நாள் தொடங்கி ஒவ்வொரு திங்களிலும் அவற்றிற்கு இடைப்பட்ட அமையங் களிலும் திருமுறை முற்றோதலைச் செய்தும் அவ்வப்பொழுதும் அரிய பல விழாக்களை எடுத்தும் பொதுவாக இந்நிலவுலகிற்கும் சிறப்பாக இத்தமிழ் உலகிற்கும் பயன்பட்டு வருவது பெரிதும் போற்றற்குரியதாகும்.

இத்திருமுறை மன்றத்தின் இவ்வரிய பணிகளுக்கு எல்லாம் மூல காரணமாயும், தகைமைசான்ற தலைவராயும் இருப்பவர்கள் நம் அன்பிற்கும் பாராட்டுதற்கும் உரிய சிவபூஜை செல்வர், திருமுறைச் செல்வர் திருமிகு ப. மூக்கப்பிள்ளை அவர்கள் ஆவார்கள். இவர்கள் இம்மன்றப் பொறுப்போடு, திருச்சிராப்பள்ளி சைவசித்தாந்தசபைத் தலைவராக இருந்தருளும் தகுதிப்பாடும் உடையவர்களாவர். இவை அன்றிச் சமய உணர்வும் சமுதாய உணர்வும் தோய்ந்து நிற்கும் நிறுவனங்களில் எல்லாம் இவர்களுக்கு இருக்கும் பொறுப்பு மிகுதியாகும். இவர்களும் இவர்கள் குடும்பமும், இவர்கள் செய்துவரும் இனைய பல சமயப் பெரும்பணிகளும் என்றென்றும் சிறப்புற்று விளங்கவும், இவற்றால் பெறத்தகும் பயன்களைத் தொடர்ந்து மேன்மேலும் சைவநல்லுலகம் பெறவும் இவர்கள் பல்லாண்டு, பல்லாண்டு வாழ இறைவனை இறைஞ்சுகின்றேன். இவர்களின் நற்பணிகளுக்கு உடனாக இருந்து உதவிவரும் உற்றார் உறவினர்ப் பெருமக்கட்கும், அன்பர்கட்கும் என் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

நால்வர் வணக்கம்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடி போற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள் போற்றி.

திருஞானசம்பந்த சுவாமிகள்

வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறிவாழ
வருஞானத் தவமுனிவர் வாகீசர் வாய்மை திகழ்
பெருநாமச் சீர்பரவ லூறுகின்றேன்; பேருலகில்
ஒருநாவுக் குரைசெய்ய ஒண்ணாமை உணராதேன்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதிசென்றாங்
கெழுதும் தமிழ்ப்பழ ஆவணம் காட்டி எனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செய் எனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகு மலரின்நற் றார்எம்பி ரான்நம்பி யாரூரனே.

மாணிக்கவாசக சுவாமிகள்

எழுதரு மறைக டேறா விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாதுசெய்து
தொழுதகை தலைமீதேறத் துளும்புகண் ணீருண்மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம்.

சேக்கிழார் துதி

தில்லைவாழ் அந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாம் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி;
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார் அடி போற்றி;

உ

திருச்சிற்றம்பலம்

பன்னிருதிருமுறைத் திருப்பாடல் திரட்டு

முதல் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருச்சிராப்பள்ளி பண்: குறிஞ்சி

1. நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை உமையொருபாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறஎன்னுள்ளங் குளிரும்மே

2. தேனயம் பாடும் சிராப்பள்ளியானைத் திரைசூழ்ந்த
கானல்சங்கேனும் கழுமலவூரில் கவுணியன்
ஞானசம்பந்தன் நலம்மிகுபாடல் இவை வல்லார்
வானசம்பந்தத் தவரொ டுமன்னி வாழ்வாரே.

இரண்டாம் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருவாலவாய் பண்: காந்தாரம்

3. மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆலவாயான் திருநீறே.

4. ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும்பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணியாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர்தாமே.

மூன்றாம் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள்

திருஆனைக்கா திருவிராகம் பண்: கௌசிகம்

5. வானைக்காவில் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவில் இன்மொழித் தேவிபாக மாயினான்
ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவோர்க் கேதும்ஏதம் இல்லையே.

6. ஊழியூழி வையகத் துயிர்கள் தோற்று வானொடும்
ஆழியானும் காண்கிலா ஆனைக்காவில் அண்ணலைக்
காழி ஞான சம்பந்தன் கருதிச்சொன்ன பத்திவை
வாழியாகக் கற்பவர் வல்வினைகள் மாயுமே.

நான்காம் திருமுறை

திருநாவுக்கரசு சுவாமிகள்

கோயில் பண்: கொல்லி

7. குனித்த புருவமுங் கொவ்வைச்செவ் வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டு வதேஇந்த மானிலத்தே.

திருப்பாதிரிப்புலியூர் திருநேரிசை

8. புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

ஐந்தாம் திருமுறை

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருமறைக்காடு திருக்குறுந்தொகை

9. பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே.

10. அரக்க னைவிர லால்அடர்த் திட்டநீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானீரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரோ
சரக்க இக்கத வந்திறப் பிம்மினே.

ஆறாம் திருமுறை

திருநாவுக்கரசு சுவாமிகள்

திருவாரூர் **திருத்தாண்டகம்**

11. நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலை புனல்சேர் செஞ்சடையெம் ஆதீ யென்றும்
ஆரூரா என்றென்றே அலறா நில்லே.

திருவையாறு **திருத்தாண்டகம்**

12. ஓசை யொலியெலா மானாய் நீயே
உலகுக் கொருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலா மானாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய்நீயே
தேச விளக்கெலா மானாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதி.

ஏழாம் திருமுறை

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருமழபாடி **பண்: நட்டராகம்**

13. பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே
மன்னே மாமணியேமழ பாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனி யாரை நினைக்கேனே.

14. ஏரார் முப்புரமும் எரியச்சிலை தொட்டவனை
வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்
சீரார் நாவலர்கோன் ஆரூரன் உரைத்ததமிழ்
பாரோர் ஏத்தவல்லார் பரலோகத் திருப்பாரே.

எட்டாம் திருமுறை

மாணிக்கவாசக சுவாமிகள்

திருவாசகம் – திருச்சதகம்

15. யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில் வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன்
தேனேயும் மலர்க்கொன்றைச் சிவனே யெம்பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே.

திருவாசகம் – திருப்பூவல்லி

16. இணையார் திருவடி யென்தலைமேல் வைத்தலுமே
துணையான சுற்றங்க ளத்தனையும் துறந்தொழிந்தேன்
அணையார் புனற்றில்லை யம்பலத்தே யாடுகின்ற
புணையாளன் சீர்பாடிப் பூவல்லி கொய்யாமோ.

எட்டாம் திருமுறை

மாணிக்கவாசக சுவாமிகள்

திருக்கோவையார் – காட்சி

17. திருவளர் தாமரை சீர்வளர் காவிக ளீசர்தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள்கொண்
டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கி யனநடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே.

ஒன்பதாம் திருமுறை

திருவிசைப்பா

திருமாளிகைத்தேவர்

கோயில் **பண்: பஞ்சமம்**

18. நீறணி பவளக்குன்றமே நின்றநெற்றிக் கண்ணுடையதோர்
நெருப்பே
வேறணி புவன போகமே யோக வெள்ளமே மேருவில் வீரா,
ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா, அம்பொன்செய் அம்பலத்தரசே
ஏறணி கொடி யெம்மீசனே யுன்னைத் தொண்டனேன்
இசையுமாறிசையே.

கருவூர்த்தேவர்

கங்கை கொண்ட சோழேச்சரம் ***பண்: பஞ்சமம்***

19. அன்னமாய் விசும்பு பறந்தயன்தேட அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த எளிமையை
என்றுநான் மறக்கேன்
முன்னம்மா லறியா ஒருவனாம் இருவா முக்கணா நாற்பெருந்
தடந்தோள்
கன்னலே தேனே அமுதமே கங்கை கொண்டசோ ளேச்சரத் தானே.

சேந்தனார்

திருப்பல்லாண்டு ***பண்: பஞ்சமம்***

20. மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு ஆட்செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்த பொருள்அள வில்லதோர் ஆனந்த வெள்ளப்பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ளபொருள் என்றே பல்லாண்டு
கூறுதுமே.

பத்தாம் திருமுறை

திருமூலர்

திருமந்திரம்

21. மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவனை நண்ணுவ ரன்றே.

22. ஒன்று கண்டேன் இவ்வுலகுக் கொருகனி
நன்று கண்டாய் அது நமச்சி வாயக் கனி
மென்று கண்டால் அது மெத்தென் றிருக்கும்
தின்று கண்டால் அது தித்திக்கும் தானே.

பதினொன்றாம் திருமுறை

காரைக்காலம்மையார்

அற்புதத் திருவந்தாதி

23. இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படருநெறி பணியாரேனும் சுடருருவில்
என்பருக் கோலத் தெரியாரும் எம்மானார்க்
கன்பரு தென்னேஞ் சவர்க்கு.

சேரமான்பெருமாள்

பொன்வண்ணத்தந்தாதி

24. பொய்யா நரகம் புகினும் துறக்கினும் போந்துபுக்கிங்
குய்யா உடம்பினொ டுர்வ நடப்ப பறப்ப என்று
நையா விளியினும் நானிலம் ஆளினும் நான் மறைசேர்
மையார்மிடற்றான் அடிமறவா வரம் வேண்டுவனே.

பன்னிரண்டாம் திருமுறை

சேக்கிழார்

திருத்தொண்டர் புராணம்

25. ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளமுமாகி
சோதியா யுணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியாநிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

26. மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலாரடியார் தமையமுது செய்வித்தல்
கண்ணினாலவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையா மெனினுலகர்முன் வருகென வுரைப்பார்.

திருச்சிற்றம்பலம்

தொல்வினை தீர்த்திடும் தூய திருப்பதிம்

முதல் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

திருப்பிரமபுரம் **(சீகாழி)** **பண்: நட்பாடை**

திருச்சிற்றம்பலம்

தோடுடையசெவி யன்விடையேறியோர்
தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென்
னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந்
தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 1

முற்றலாமையிள நாகமோடேன
முளைக்கொம்பவைபூண்டு
வற்றலோடுகல னாப்பலிதேர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்
கற்றல்கேட்டலுடை யார்பெரியார்கழல்
கையாற்றொழுதேத்தப்
பெற்றமூர்ந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 2

நீர்பரந்தநிமிர் புன்சடைமேலோர்
நிலாவெண்மதிசூடி
ஏர்பரந்தவின வெள்வளைசோரவென்
னுள்ளங்கவர்கள்வன்
ஊர்பரந்தவுல கின்முதலாகிய
வோரூரிதுவென்னப்
பேர்பரந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 3

விண்மகிழ்ந்தமதி லெய்ததுமன்றி
விளங்குதலை யோட்டில்
உண்மகிழ்ந்துபலி தேரியவந்தென
துள்ளங்கவர்கள்வன்
மண்மகிழ்ந்தவர வம்மலர்க்கொன்றை
மலிந்தவரைமார்பிற்
பெண்மகிழ்ந்தபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 4

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை
யூரும்மிவனென்ன
அருமையாகவுரை செய்யவமர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர்
காலம்மிதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 5

மறைகலந்தவொலி பாடலோடாடல
ராகிமழுவேந்தி
இறைகலந்தவின வெள்வளைசோரவென்
னுள்ளங்கவர்கள்வன்
கறைகலந்தகடி யார்பொழினீடுயர்
சோலைக்கதிர்சிந்தப்
பிறைகலந்தபீர் மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 6

சடைமுயங்குபுன லன்னனலன்னெரி
வீசிச்சதிர்வெய்த
உடைமுயங்குமர வோடுழிதந்தென
துள்ளங்கவர்கள்வன்
கடன்முயங்குகழி சூழ்குளிர்கானலம்
பொன்னஞ்சிறகன்னம்
பெடைமுயங்குபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 7

வியரிலங்குவரை யுந்தியதோள்களை
வீரம்விளைவித்த
உயரிலங்கையரை யன்வலிசெற்றென
துள்ளங்கவர்கள்வன்
துயரிலங்கும்முல கிற்பலவூழிகள்
தோன்றும்பொழுதெல்லாம்
பெயரிலங்குபிர மாபுரமேவிய
பெம்மானிவனன்றே. 8

தாணுதல்செய்திறை காணியமாலொடு
தண்டாமரையானும்
நீணுதல்செய்தொழி யந்நிமிர்ந்தானென
துள்ளங்கவர்கள்வன்

வாணுதல்செய்மக ளீர்முதலாகிய
    வையத்தவரேத்தப்
பேணுதல்செய்பிர மாபுரமேவிய
    பெம்மானிவனன்றே. 9

புத்தரோடுபொறி யில்சமணும்புறங்
    கூறநெறிநில்லா
ஒத்தசொல்லஉல கம்பலிதேர்ந்தென
    துள்ளங்கவர்கள்வன்
மத்தயானைமறு கவ்வுரிபோர்த்ததோர்
    மாயம்மிது வென்னப்
பித்தர்போலும்பிர மாபுரமேவிய
    பெம்மானிவனன்றே. 10

அருநெறியமறை வல்லமுனியகன்
    பொய்கையலர்மேய
பெருநெறியபிர மாபுரமேவிய
    பெம்மானிவன்றன்னை
ஒருநெறியமனம் வைத்துணர்ஞானசம்
    பந்தன்னுரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை
    தீர்தலெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

செல்வங்கொழித்திடச் செய்யும் செந்தமிழ்ப் பதிகங்கள்

மூன்றாம் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

திருவாவடுதுறை *பண்: காந்தார பஞ்சமம்*

திருச்சிற்றம்பலம்

இடரினும் தளரினும் என துறுநோய்
தொடரினும் உனகழல் தொழுது எழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 1

வாழினும் சாவினும் வருந்தினும் போய்
வீழினும் உனகழல் விடுவேன் அல்லேன்
தாழிளம் தடம்புனல் தயங்கு சென்னிப்
போழிள மதிவைத்த புண்ணியனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 2

நனவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேன் அம்மான்
புனல்விரி நறுங்கொன்றைப் போது அணிந்த
கனல்எரி அனல்புல்கு கையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 3

தும்மலோடு அருந்துயர் தோன் றிடினும்
அம்மலர் அடியலால் அரற்றாது என்நாக்
கைம்மல்கு வரிசிலைக் கணை ஒன்றினால்
மும்மதில் எரிஎழ முனிந்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 4

கையது வீழினும் கழி வுறினும்
செய்கழல் அடியலால் சிந்தை செய்யேன்
கொய்யணி நறுமலர் குலாய சென்னி
மையணி மிடறுடை மறையவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 5

வெந்துயர் தோன்றி ஓர் வெருவுறினும்
எந்தாய் உன்அடியலால் ஏத்தாது என்நா
ஐந்தலை அரவு கொண்டு அரைக்கசைத்த
சந்தவெண் பொடிஅணி சங்கரனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 6

வெப்பொடு விரவி ஓர் வினை வரினும்
அப்பா உன் அடியலால் அரற்றாது என் நா
ஒப்புடை ஒருவனை உரு அழிய
அப்படி அழல்எழ விழித்தவனே

இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 7

பேரிடர் பெருகி ஓர் பிணி வரினும்
சீருடைக் கழல்லால் சிந்தை செய்யேன்
ஏருடை மணிமுடி இராவணனை
ஆரிடர் படவரை அடர்த்தவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 8

உண்ணினும் பசிப்பினும் உறங்கினும்நின்
ஒண்மலர் அடியலால் உரையாது என்நாக்
கண்ணனும் கடிகமழ் தாமரை மேல்
அண்ணலும் அளப்பரிதாயவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 9

பித்தொடு மயங்கி ஓர்பிணி வரினும்
அத்தா உன் அடியலால் அரற்றாது என்நா
புத்தருஞ் சமணரும் புறன் உரைக்கப்
பத்தர்கட்கு அருள்செய்து பயின்றவனே
இதுவோ எமை ஆளுமாறு ஈவது ஒன்று எமக்கில்லையேல்
அதுவோ உனது இன்னருள் ஆவடுதுறை அரனே. 10

அலைபுனல் ஆவடு துறை அமர்ந்த
இலைநுனை வேல்படை எம்இறையை
நலம்மிகு ஞானசம் பந்தன் சொன்ன
விலையுடை அருந்தமிழ் மாலைவல்லார்
வினை ஆயின நீங்கிப்போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாக முன்னேறுவர் நிலமிசை நிலை இலாரே. 11

திருச்சிற்றம்பலம்

ஏழாம் திருமுறை

சுந்தரமூர்த்திநாயனார் அருளியவை

நம்பி என்ற திருப்பதிகம் **பண்: தக்கேசி**

திருச்சிற்றம்பலம்

மெய்யைமுற் றப்பொடிப் பூசியோர் நம்பி
வேதம்நான் கும்விரித் தோதியோர் நம்பி
கையில்ஓர் வெண்மழு வேந்தியோர் நம்பி
கண்ணும் மூன்றுமுடை யாயொரு நம்பி

19

செய்ய நம்பிசிறு செஞ்சடை நம்பி
திரிபுரந் தீயெழச் செற்றதோர் வில்லால்
எய்தநம்பி யென்னை ஆளுடைநம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 1

திங்கள் நம்பிமுடி மேலடி யார்பால்
சிறந்த நம்பிபிறந் தவுயிர்க் கெல்லாம்
அங்கண் நம்பியருள் மால்விசும் பாளும்
அமரர் நம்பிகும ரன்முதல் தேவர்
தங்கள் நம்பிதவத் துக்கொரு நம்பி
தாதை என்றுன் சரண்பணிந் தேத்தும்
எங்கள் நம்பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 2

வருந்த அன்றுமத யானை உரித்த
வழக்கு நம்பிமுழக் குங்கடல் நஞ்சம்
அருந்தும் நம்பிஅம ரர்க்கமு தீந்த
அருளின் நம்பி பொருளால்வரு நட்டம்
புரிந்த நம்பிபுரி நூலுடை நம்பி
பொழுதும் விண்ணும்முழு தும்பலவாகி
இருந்த நம்பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே 3

ஊறு நம்பிஅமு தாவுயிர்க் கெல்லாம்
உரிய நம்பிதெரி யம்மறை அங்கம்
கூறு நம்பிமுனி வர்க்கருங் கூற்றைக்
குமைத்த நம்பிகுமை யாப்புலன் ஐந்தும்
சீறு நம்பிதிரு வெள்ளடை நம்பி
செங்கண்வெள் ளைச்செழுங் கோட்டெரு தென்றும்
ஏறு நம்பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே 4

குற்ற நம்பிகுறு காரெயில் மூன்றைக்
குலைத்த நம்பிசிலை யாவரை கையில்
பற்று நம்பிபர மானந்த வெள்ளம்
பணிக்கும் நம்பியெனப் பாடுத லல்லால்
மற்று நம்பியுனக் கென்செய வல்லேன்
மதியி லேன்படு வெந்துயர் எல்லாம்
எற்று நம்பியென்னை ஆளுடைநம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 5

அரித்த நம்பிஅடி கைதொழு வார்நோய்
ஆண்ட நம்பிமுன்னை ஈண்டுல கங்கள்
தெரித்த நம்பியொரு சேவுடைநம்பி
சில்பலிக் கென்றகந் தோறுமெய் வேடம்
தரித்த நம்பிசம யங்களின் நம்பி
தக்கன்றன் வேள்விபுக் கன்றிமை யோரை
இரித்த நம்பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 6

பின்னை நம்பும்புயத் தான்நெடு மாலும்
பிரமனும் என்றிவர் நாடியுங் காணா
உன்னை நம்பியொரு வர்க்கெய்த லாமே
உலகு நம்பிஉரை செய்யும தல்லால்
முன்னை நம்பிபின்னும் வார்சடை நம்பி
முழுதிவை இத்தனை யுந்தொகுத் தாண்ட
தென்னை நம்பியெம் பிரானாய்நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 7

சொல்லை நம்பிபொரு ளாய்நின்ற நம்பி
தோற்றம் ஈறுமுத லாகிய நம்பி
வல்லை நம்பியடி யார்க்கருள் செய்ய
வருந்தி நம்பிஉனக் காட்செய கில்லார்
அல்லல் நம்பிபடு கின்றதென் நாடி
அணங்கொரு பாகம்வைத் தெண்கணம் போற்ற
இல்ல நம்பியிடு பிச்சைகொள் நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 8

காண்டு நம்கழற் சேவடி என்றும்
கலந்துனைக் காதலித் தாட்செய்கிற் பாரை
ஆண்டு நம்பியவர் முன்கதி சேரா
அருளும் நம்பிகுரு மாப்பிறை பாம்பைத்
தீண்டு நம்பிசென்னி யிற்கன்னி தங்கத்
திருத்து நம்பிபொய்ச் சமண்பொரு ளாகி
ஈண்டு நம்பிஇமை யோர்தொழு நம்பி
எழுபிறப் பும்எங்கள் நம்பிகண் டாயே. 9

கரக்கும் நம்பிகசி யாதவர் தம்மைக்
கசிந்த வர்க்கிம்மையோ டம்மையில் இன்பம்
பெருக்கு நம்பிபெரு கக்கருத்தா. 10

திருச்சிற்றம்பலம்

திருமணம் கூட்டும் திருப்பதிகம்

ஐந்தாம் திருமுறை

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

திருமணஞ்சேரி திருக்குறுந்தொகை

திருச்சிற்றம்பலம்

பட்ட நெற்றியர் பாய்புலித் தோலினர்
நட்ட நின்று நவில்பவர் நாடொறும்
சிட்டர் வாழ்திரு வார்மணஞ் சேரியெம்
வட்ட வார்சடை யார்வண்ணம் வாழ்த்துமே. 1

துன்னு வார்குழ லாளுமை யாளொடும்
பின்னு வார்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்மணஞ் சேரி மருந்தினை
உன்னு வார்வினை யாயின ஓயுமே. 2

புற்றில் ஆடர வாட்டும் புனிதனார்
தெற்றி னார்புரந் தீயெழச் செற்றவர்
சுற்றி னார்மதில் சூழ்மணஞ் சேரியார்
பற்றி னாரவர் பற்றவர் காண்மினே. 3

மத்த மும்மதி யும்வளர் செஞ்சடை
முத்தர் முக்கணர் மூசர வம்மணி
சித்தர் தீவணர் சீர்மணஞ் சேரியெம்
வித்தர் தாம்விருப் பாரை விருப்பரே. 4

துள்ளு மான்மறி தூமழு வாளினர்
வெள்ள நீர்கரந் தார்சடை மேலவர்
அள்ள வார்வயல் சூழ்மணஞ் சேரியெம்
வள்ள லார்கழல் வாழ்த்தல்வாழ் வாவதே. 5

நீர்ப ரந்த நிமிர்புன் சடையின் மேல்
ஊர்ப ரந்த உரகம் அணிபவர்
சீர்ப ரந்த திருமணஞ் சேரியார்
ஏர்ப ரந்தங் கிலங்குசூ லத்தரே. 6

சுண்ணத் தர்சுடு நீறுகந் தாடலார்
விண்ணத் தம்மதி சூடிய வேதியர்
மண்ணத் தம்முழ வார்மணஞ் சேரியார்
வண்ணத் தம்முலை யாளுமை வண்ணரே. 7

துன்ன வாடையர் தூமழு வாளினர்
பின்னு செஞ்சடை மேற்பிறை வைத்தவர்
மன்னு வார்பொழில் சூழ்மணஞ் சேரியெம்
மன்ன னார்கழ லேதொழ வாய்க்குமே. 8

சித்தர் தேவர்கள் மாலொடு நான்முகன்
புத்தர் சேரமண் கையர் புகழவே
மத்தர் தாமறி யார்மணஞ் சேரியெம்
அத்த னாரடி யார்க்கல்லல் இல்லையே. 9

கடுத்த மேனி யரக்கன் கயிலையை
எடுத்த வன்னெடு நீள்முடி பத்திறப்
படுத்த லும்மணஞ் சேரி யருளெனக்
கொடுத்த னன்கொற்ற வாளொடு நாமமே. 10

திருச்சிற்றம்பலம்

நன்மக்கட்பேறு நல்கும் பதிகம்

இரண்டாம் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

திருவெண்காடு — *பண்: சீகாமரம்*

திருச்சிற்றம்பலம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டு லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே. 1

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாஒன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே 2

மண்ணொடுநீ ரனல்காலோ டாகாயம் மதிஇரவி
எண்ணில்வரும் இயமானன் இகபரமும் எண்டிசையும்
பெண்ணினொடாண் பெருமையொடு சிறுமையுமாம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபடவெண் காடிடமா விரும்பினனே. 3

விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைகாட்டுங் காட்சியதே. 4

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான்அடியார் என்றடர அஞ்சுவரே. 5

தண்மதியும் வெய்யரவுந் தாங்கினான் சடையினுடன்
ஒண்மதிய நுதலுமையோர் கூறுகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன்நாமம் பலவோதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும் வெண்காடே. 6

சக்கரம்மாற் கீந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமேல் அசைத்தானும் அடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளநன் குடையானும் முக்கணுடை இறையவனே. 7

பண்மொய்த்த இன்மொழியாள் பயமெய்த மலையெடுத்த
உன்மத்தன் உரம்நெரித்தன்று அருள்செய்தான் உறைகோயில்
கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல்முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும் வெண்காடே. 8

கள்ளார்செங் கமலத்தான் கடல்கிடந்தான் எனஇவர்கள்
ஒள்ளாண்மை கொளற்கோடி உயர்ந்தாழ்ந்தும் உணர்வரியான்
வெள்ளானை தவஞ்செய்யும் மேதகுவெண் காட்டானென்று
உள்ளாடி உருகாதார் உணர்வுடைமை உணரோமே. 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டுமொழி பொருளென்னும்
பேதையர்கள் அவர்பிறிமின் அறிவுடையீர் இதுகேண்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன்திருவெண் காட்டானென்று
ஓதியவர் யாதுமொரு தீதிலரென் றுணருமினே. 10

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைசென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே. 11

திருச்சிற்றம்பலம்

கண்ணொளிப் பெருக்கும் கவின்மிகு பதிகம்

ஏழாம் திருமுறை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

திருக்கச்சியேகம்பம் **பண்: தக்கேசி**

திருச்சிற்றம்பலம்

ஆலந் தானுகந் தமுதுசெய் தானை
ஆதி யையமரர் தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தையு ளானை
ஏல வார்குழ லாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 1

உற்ற வர்க்குத வும்பெரு மானை
ஊர்வ தொன்றுடை யான்உம்பர் கோனைப்
பற்றி னார்க்கென்றும் பற்றவன் றன்னைப்
பாவிப் பார்மனம் பாவிக்கொண் டானை
அற்ற மில்புக ழாளுமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கற்றை வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 2

திரியும் முப்புரம் தீப்பிழம் பாகச்
செங்கண் மால்விடை மேற்றிகழ் வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந் தானைக்
காம னைக்கன லாவிழித் தானை

வரிகொள் வெள்வளை யாளுமை நங்கை
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
பெரிய கம்பனை யெங்கள் பிரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 3

குண்ட லந்திகழ் காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழி லானை
வண்டலம் புமலர்க் கொன்றையி னானை
வாள ராமதி சேர்சடை யானைக்
கெண்டை யந்தடங் கண்ணுமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 4

வெல்லும் வெண்மழு வொன்றுடை யானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் றன்னை
அல்லல் தீர்த்தருள் செய்யவல் லானை
அரும றையவை அங்கம்வல் லானை
எல்லை யில்புக ழாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 5

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங்கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடை யானைச்
சாம வேதம் பெரிதுகப் பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
கங்கை யாளனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 6

விண்ண வர்தொழு தேத்திநின் றானை
வேதந் தான்விரித் தோதவல் லானை
நண்ணி னார்க்கென்றும் நல்லவன் றன்னை
நாளும் நாமுகக் கின்றபி ரானை
எண்ணில் தொல்புக ழாளுமை நங்கை
என்று மேத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடை கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 7

சிந்தித் தென்றும் நினைந்தெழு வார்கள்
சிந்தை யில்திக ழுஞ்சிவன் றன்னைப்
பந்தித் தவினைப் பற்றறுப் பானைப்
பாலொ டானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்த மில்புக ழாளுமை நங்கை
ஆத ரித்து வழிபடப் பெற்ற
கந்த வார்சடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 8

வரங்கள் பெற்றுழல் வாளரக் கர்தம்
வாலி யபுரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் றன்பெரு வேள்வி
நிரந்தர ரஞ்செய்த நிட்கண் டகனைப்
பரந்த தொல்புக ழாளுமை நங்கை
பரவி யேத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 9

எள்க லின்றி இமையவர் கோனை
ஈசனைவழி பாடுசெய் வாள்போல்
உள்ளத் துள்கி யுகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி யோடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை யெங்கள் பிரானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே. 10

பெற்ற மேறுகந் தேறவல் லானைப்
பெரிய எம்பெரு மானென்றெப் போதும்
கற்ற வர்பர வப்படு வானைக்
காணக் கண்ணாடி யேன்பெற்ற தென்று
கொற்ற வன்கம்பன் கூத்தன்எம் மானைக்
குளிர்பொ ழில்திரு நாவலா ரூரன்
நற்ற மிழிவை ஈரைந்தும் வல்லார்
நன்னெ றியுல கெய்துவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

ஏழாம் திருமுறை

சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது

திருவாரூர் **பண்: செந்துருத்தி**

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை யுமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று முகத்தால் மிகவாடி
ஆளா யிருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே. 1

விற்றுக் கொள்வீர் ஒற்றி யல்லேன் விரும்பி யாட்பட்டேன்
குற்றம் ஒன்றுஞ் செய்த தில்லை கொத்தை ஆக்கினீர்
எற்றுக் கடிகேள் என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
மற்றைக் கண்தான் தாரா தொழிந்தால் வாழ்ந்து போதீரே. 2

அன்றில் முட்டா தடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
கன்று முட்டி யுண்ணச் சுரந்த காலி யவைபோல
என்றும் முட்டாப் பாடும் அடியார் தங்கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் வீழ்ந்தால் வாழ்ந்து போதீரே. 3

துருத்தி உறைவீர் பழனம் பதியாச் சோற்றுத் துறையாள்வீர்
இருக்கை திருவா ரூரே உடையீர் மனமே எனவேண்டா
அருத்தி யுடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வருத்தி வைத்து மறுமை பணித்தால் வாழ்ந்து போதீரே. 4

செந்தண் பவளந் திகழுஞ் சோலை யிதுவோ திருவாரூர்
எந்தம் அடிகேள் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்குச்
சந்தம் பலவும் பாடும் அடியார் தங்கண் காணாது
வந்தெம் பெருமான் முறையோ வென்றால் வாழ்ந்து போதீரே. 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேருந் திருவாரூர்ப்
புனைத்தார் கொன்றைப் பொன்போல் மாலைப்புரிபுன் சடையீரே
தனத்தா லின்றித் தாந்தாம் மெலிந்து தங்கண் காணாது
மனத்தால் வாடி யடியார் இருந்தால் வாழ்ந்து போதீரே. 6

ஆயம் பேடை யடையுஞ் சோலை ஆரூர் அகத்தீரே
ஏயெம் பெருமான் இதுவே யாமா றுமக்காட் பட்டோர்க்கு
மாயங் காட்டிப் பிறவி காட்டி மறவா மனங்காட்டிக்
காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே. 7

கழியாய்க் கடலாய்க் கலனாய் நிலனாய்க் கலந்து சொல்லாகி
இழியாக் குலத்திற் பிறந்தோ மும்மை யிகழா தேத்துவோம்
பழிதான் ஆவ தறியீர் அடிகேள் பாடும் பத்தரோம்
வழிதான் காணா தலமந் திருந்தால் வாழ்ந்து போதீரே. 8

பேயோ டேனும் பிறிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்
காய்தான் வேண்டிற் கனிதான் அன்றோ கருதிக் கொண்டலல்லால்
நாய்தான் போல நடுவே திரிந்தும் உமக்காட் பட்டோர்க்கு
வாய்தான் திறவீர் திருவா ரூரிர் வாழ்ந்து போதீரே. 9

செருந்தி செம்பொன் மலருஞ் சோலை இதுவோ திருவாரூர்
பொருந்தித் திருமூ லட்டா னம்மே யிடமாக் கொண்டீரே
இருந்தும் நின்றும் கிடந்தும் உம்மை யிகழா தேத்துவோம்
வருந்திவந்தும்உமக்கொன்றுரை த்தால் வாழ்ந்து போதீரே. 10

காரூர் கண்டத் தெண்டோள் முக்கண் கலைகள் பலவாகி
ஆரூர்த் திருமூ லட்டா னத்தே அடிப்பே ராரூரன்
பாரூர் அறிய என்கண் கொண்டீர் நீரே பழிப்பட்டீர்
வாரூர் முலையாள் பாகங் கொண்டீர் வாழ்ந்து போதீரே. 11

திருச்சிற்றம்பலம்

தீராப் பிணிகளைத் தீர்க்கும் திருப்பதிகம்

முதல் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

திருச்செங்கோட்டு *பண்: வியாழக்குறிஞ்சி*

திருச்சிற்றம்பலம்

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 1

காவினை யிட்டுங் குளம்பல தொட்டும் களிமனத்தால்
ஏவினை யால்எயில் மூன்றெரித் தீரென் றிருபொழுதும்
பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம்
தீவினை வந்தெமைத் தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 2

முலைத்தடம் மூழ்கிய போகங் களும்மற் றெவையும்எல்லாம்
விலைத்தலை யாவணங் கொண்டெமை யாண்ட விரிசடையீர்
இலைத்தலைச் சூலமுந் தண்டும் மழுவும் இவையுடையீர்
சிலைத்தெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 3

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 4

மற்றிணை யில்லா மலைதிரண் டன்னதிண் டோளுடையீர்
கிற்றெமை யாட்கொண்டு கேளா தொழிவதுந் தன்மைகொல்லோ
சொற்றுணை வாழ்க்கை துறந்துந் திருவடி யேயடைந்தோம்
செற்றெமைத் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 5

மறக்கு மனத்தினை மாற்றியெம் ஆவியை வற்புறுத்திப்
பிறப்பில் பெருமான் திருந்தடிக் கீழ்ப்பிழை யாதவண்ணம்
பறித்த மலர்கொடு வந்துமை யேத்தும் பணியடியோம்
சிறப்பிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 6--7

கருவைக் கழித்திட்டு வாழ்க்கை கடிந்துங் கழலடிக்கே
உருகி மலர்கொடு வந்துமை யேத்துதும் நாமடியோம்
செருவில் அரக்கனைச் சீரி லடர்த்தருள் செய்தவரே
திருவிலித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 8

நாற்ற மலர்மிசை நான்முகன் நாரணன் வாதுசெய்து
தோற்ற முடைய அடியும் முடியுந் தொடர்வரியீர்
தோற்றினுந் தோற்றுந் தொழுது வணங்குதும் நாமடியோம்
சீற்றம தாம்வினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 9

சாக்கியப் பட்டுஞ் சமணுரு வாகி யுடையொழிந்தும்
பாக்கிய மின்றி யிருதலைப் போகமும் பற்றும்விட்டார்
பூக்கமழ் கொன்றைப் புரிசடை யீரடி போற்றுகின்றோம்
தீக்குழித் தீவினை தீண்டப்பெ றாதிரு நீலகண்டம் 10

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகில் இமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன் செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. 11

திருச்சிற்றம்பலம்

முதல் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியது

திருப்பாச்சிலாச்சிராமம் **பண்: தக்க ராகம்**

திருச்சிற்றம்பலம்

துணிவளர்திங்கள் துளங்கிவிளங்கச்
சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடம்சூழ
ஆரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 1

கலைபுனைமானுரி தோலுடையாடை
கனல்சுட ராலிவர்கண்கள்
தலையணிசென்னியர் தாரணிமார்பர்
தம்மடிகள் ளிவரென்ன
அலைபுனல்பூம்பொழில் சூழ்ந்தமர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
இலைபுனைவேலரோ ஏழையைவாட
இடர்செய்வதோ இவரீடே. 2

வெஞ்சுடராடுவர் துஞ்சிருள்மாலை
வேண்டுவர் பூண்பதுவெண்ணூல்
நஞ்சடைகண்டர் நெஞ்சிடமாக
நண்ணுவர் நம்மைநயந்து
மஞ்சடைமாளிகை சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
செஞ்சுடர்வண்ணரோ பைந்தொடிவாடச்
சிதைசெய்வதோ இவர்சீரே. 3

கனமலர்க்கொன்றை யலங்கலிலங்கக்
கனல்தரு தூமதிக்கண்ணி
புனமலர்மாலை யணிந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
வனமலிவண்பொழில் சூழ்தருபாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மனமலிமைந்தரோ மங்கையைவாட
மயல்செய்வதோ இவர்மாண்பே. 4

மாந்தர்தம்பால்நறு நெய்மகிழ்ந்தாடி
வளர்சடை மேற்புனல்வைத்து
மோந்தைமுழாக்குழல் தாளமொர்வீணை
முதிரவோர் வாய்மூரிபாடி
ஆந்தைவிழிச்சிறு பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சாந்தணிமார்பரோ தையலைவாடச்
சதுர்செய்வதோ இவர்சார்வே. 5

நீறுமெய்பூசி நிறைசடைதாழ
நெற்றிக்கண் ணுலுற்றுநோக்கி
ஆறதுசூடி யாடரவாட்டி
ஐவிரற் கோவணஆடை
பாறருமேனியர் பூதத்தர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட
இடர்செய்வதோ இவரீடே. 6

பொங்கிளநாகமொ ரேகவடத்தோ
டாமைவெண் ணூல்புனைகொன்றை
கொங்கிளமாலை புனைந்தழகாய
குழகர்கொ லாமிவரென்ன
அங்கிளமங்கையோர் பங்கினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
சங்கொளிவண்ணரோ தாழ்குழல்வாடச்
சதிர்செய்வதோ இவர்சார்வே. 7

ஏவலத்தால்விச யற்கருள்செய்து
இராவண னையீடழித்து
மூவரிலும்முத லாய்நடுவாய
மூர்த்தியை யன்றிமொழியாள்
யாவர்களும்பர வும்மெழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
தேவர்கடேவரோ சேயிழைவாடச்
சிதைசெய்வதோ இவர்சேர்வே. 8

மேலதுநான்முக னெய்தியதில்லை
கீழது சேவடிதன்னை
நீலதுவண்ணனு மெய்தியதில்லை
யெனவிவர் நின்றதுமல்லால்

ஆலதுமாமதி தோய்பொழிற்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பாலதுவண்ணரோ பைந்தொடிவாடப்
பழிசெய்வதோ இவர்பண்பே. 9

நாணொடுகூடிய சாயினரேனும்
நகுவ ரவரிருபோதும்
ஊணொடுகூடிய வுட்குநகையா
லுரைக ளவைகொளவேண்டா
ஆணொடுபெண்வடி வாயினர்பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
பூணெடுமார்பரோ பூங்கொடிவாடப்
புனைசெய்வதோ இவர்பொற்பே. 10

அகமலியன்பொடு தொண்டர்வணங்க
ஆச்சிரா மத்துறைகின்ற
புகைமலிமாலை புனைந்தழகாய
புனிதர்கொ லாமிவரென்ன
நகைமலிதண்பொழில் சூழ்தருகாழி
நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலிதண்டமிழ் கொண்டிவையேத்தச்
சாரகி லாவினைதானே. 11

திருச்சிற்றம்பலம்

திருநீற்றுத் திருப்பதிகம்

திருஆலவாய் *பண்: காந்தாரம்*

திருச்சிற்றம்பலம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே. 1

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 3

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருஆல வாயான் திருநீறே. 4

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆல வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும்வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருஆல வாயான் திருநீறே. 6

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி ஆல வாயான் திருநீறே. 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பாடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே. 10

ஆற்றல் அடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

வாக்குவன்மை வழங்கும் வண்டமிழ்ப் பதிகம்

எட்டாம் திருமுறை – திருச்சாழல்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

திருச்சிற்றம்பலம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயான் மறைபோலும் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ 1

என்னப்பன் எம்பிரான் எல்லார்க்குந் தானீசன்
துன்னம்பெய் கோவணமாக் கொள்ளுமது என்னேடீ
மன்னுகலை துன்னுபொருள் மறைநான்கே வான்சரடாத்
தன்னையே கோவணமாச் சாத்தினன்காண் சாழலோ. 2

கோயில் சுடுகாடுகொல்புலித்தோல் நல்லாடை
தாயுமிலி தந்தையிலி தான்தனியன் காணேடீ
தாயுமிலி தந்தையுமிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ 3

அயனை அநங்கனை அந்தகனைச் சந்திரனை
வயனங்கண் மாயா வடுச்செய்தான் காணேடீ
நயனங்கள் மூன்றுடைய நாயகனே தண்டித்தால்
சயமன்றோ வானவர்க்குத் தாழ்குழலாய் சாழலோ. 4

தக்கனையும் எச்சனையும் தலையறுத்துத் தேவர்கணம்
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்ததுதான் என்னேடீ
தொக்கனவந் தவர்தம்மைத் தொலைத்தருளி யருள்கொடுத்தங்(கு)
எச்சனுக்கு மிகைத்தலைமற் றருளினன்காண் சாழலோ. 5

அலரவனும் மாலவனும் அறியாமே அழலுருவாய்
நிலமுதற்கீ ழண்டமுற நின்றதுதான் என்னேடீ
நிலமுதற்கீ ழண்டமுற நின்றிலனேல் இருவருந்தம்
சலமுகத்தா லாங்காரந் தவிரார்காண் சாழலோ. 6

மலைமகளை யொருபாகம் வைத்தலுமே மற்றொருத்தி
சலமுகத்தா லவன்சடையிற் பாயுமது என்னேடீ
சலமுகத்தா லவன்சடையிற் பாய்ந்திலளேல் தரணியெல்லாம்
பிலமுகத்தே புகப்பாய்ந்து பெருங்கேடாம் சாழலோ. 7

கோலால மாகிக் குரைகடல்வா யன்றெழுந்த
ஆலால முண்டான் அவன்சதுர்தான் என்னேடீ
ஆலால முண்டிலனேல் அன்றயன்மா லுள்ளிட்ட
மேலாய தேவரெல்லாம் வீடுவர்காண் சாழலோ. 8

தென்பா லுகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பா லுகந்தான் பெரும்பித்தன் காணேடீ
பெண்பா லுகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பால் யோகெய்தி வீடுவர்காண் சாழலோ. 9

தானந்த மில்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்தான் காணேடீ
ஆனந்த வெள்ளத் தழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ 10

நங்காய் இதென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளம் தோண்மேலே காதலித்தான் காணேடீ
கங்காளம் ஆமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ. 11

கானார் புலித்தோ லுடைதலையூண் காடுபதி
ஆனால் அவனுக்கிங் காட்படுவார் ஆரேடீ
ஆனாலும் கேளாய் அயனும் திருமாலும்
வானாடர் கோவும் வழியடியார் சாழலோ. 12

மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்திருவை
உலகறியத் தீவேட்டான் என்னுமது என்னேடீ
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்
கலைநவின்ற பொருள்களெல்லாம் கலங்கிடுங்காண் சாழலோ. 13

தேன்புக்க தண்பணைசூழ் தில்லைச்சிற் றம்பலவன்
தான்புக்கு நட்டம் பயிலுமது என்னேடீ
தான்புக்கு நட்டம் பயின்றிலனேல் தரணியெல்லாம்
ஊன்புக்க வேற்காளிக் கூட்டாங்காண் சாழலோ. 14

கடகரியும் பரிமாவும் தேருமுகந் தேறாதே
இடபமுகந் தேறியவா றெனக்கறிய இயம்பேடீ
தடமதில்கள் அவை மூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாயத் தாங்கினான் திருமால்காண் சாழலோ. 15

நன்றாக நால்வர்க்கும் நான்மறையின் உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் காணேடீ
அன்றாலின் கீழிருந்தங் கறமுரைத்தான் ஆயிடினும்
கொன்றான்காண் புரமூன்றும் கூட்டோடே சாழலோ. 16

அம்பலத்தே கூத்தாடி அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று நண்ணுமது என்னேடீ
நம்பனையும் ஆமாகேள் நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசாவெந் றேத்தினகாண் சாழலோ. 17

சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்றன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி யருளினன்காண் சாழலோ 18

அம்பரமாம் புள்ளித்தோல் ஆலாலம் ஆரமுதம்
எம்பெருமா னுண்டசதுர் எனக்கறிய இயம்பேடீ
எம்பெருமா னேதுடுத்தங் கேதமுது செய்திடினும்
தம்பெருமை தானறியாத் தன்மையன்காண் சாழலோ. 19

அருந்தவருக் காலின்கீழ் அறமுதலா நான்கனையும்
இருந்தவருக் கருளுமது எனக்கறிய இயம்பேடீ
அருந்தவருக் கறமுதனான் கன்றருளிச் செய்திலனேல்
திருந்தவருக் குலகியற்கை தெரியாகாண் சாழலோ. 20

திருச்சிற்றம்பலம்

பகையழிக்கும் பண்புடைய பதிகம்

எட்டாம் திருமுறை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

திருவாசகம்

திருச்சிற்றம்பலம்

வளைந்தது வில்லு விளைந்தது பூசல்
உளைந்தன முப்புரம் உந்தீபற
ஒருங்குடன் வெந்தவா றுந்தீபற. 1

ஈரம்பு கண்டிலம் ஏகம்பர்தங்கையில்
ஓரம்பே முப்புரம் உந்தீபற
ஒன்றும் பெருமிகை உந்தீபற 2

தச்சு விடுத்தலுந் தாமடி யிட்டலும்
அச்சு முறிந்ததென் றுந்தீபற
அழிந்தன முப்புரம் உந்தீபற 3

உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்டு
எய்யவல் லானுக்கே உந்தீபற
இளமுலை பங்கனென் றுந்தீபற 4

சாடிய வேள்வி சரிந்திடத் தேவர்கள்
ஓடிய வாபாடி உந்தீபற
உருத்திர நாதனுக் குந்தீபற 5

ஆவா திருமால் அவிப்பாகங் கொண்டன்று
சாவா திருந்தானென் றுந்தீபற
சதுர்முகன் தாதையென் றுந்தீபற. 6

வெய்யவன் அங்கி விழுங்கத் திரட்டிய
கையைத் தறித்தானென் றுந்தீபற
கலங்கிற்று வேள்வியென் றுந்தீபற. 7

பார்ப்பதி யைப்பகை சாற்றிய தக்கனைப்
பார்ப்பதென் னேயேடி யுந்தீபற
பணைமுலை பாகனுக் குந்தீபற. 8

புரந்தர னாரொரு பூங்குயிலாகி
மரந்தனி லேறினார் உந்தீபற
வானவர் கோனென்றே யுந்தீபற. 9

வெஞ்சின வேள்வி வியாத்திர னார்தலை
துஞ்சின வாபாடி யுந்தீபற
தொடர்ந்த பிறப்பற்ற உந்தீபற. 10

ஆட்டின் தலையை விதிக்குத் தலையாகக்
கூட்டிய வாபாடி யுந்தீபற
கொங்கை குலுங்கநின் றுந்தீபற. 11

உண்ணப் புகந்த பகனொளித் தோடாமே
கண்ணைப் பறித்தவா றுந்தீபற.
கருக்கெட நாமெலாம் உந்தீபற. 12

நாமகள் நாசி சிரம்பிர மன்படச்
சோமன் முகனெரித் துந்தீபற
தொல்லை வினைகெட வுந்தீபற. 13

நான்மறை யோனு மகத்திய மான்படப்
போம்வழி தேடுமா றுந்தீபற
புரந்தரன் வேள்வியில் உந்தீபற. 14

சூரியனார் தொண்டை வாயினிற் பற்களை
வாரி நெரித்தவா றுந்தீபற
மயங்கிற்று வேள்வியென் றுந்தீபற. 15

தக்கனா ரன்றே தலையிழந் தார்தக்கன்
மக்களைச் சூழநின் றுந்தீபற
மடிந்தது வேள்வியென் றுந்தீபற. 16

பாலகனார்க் கன்று பாற்கடல் ஈந்திட்ட
கோலச் சடையற்கே யுந்தீபற
குமரன்றன் தாதைக்கே யுந்தீபற. 17

நல்ல மலரின்மேல் நான்முக னார்தலை
ஒல்லை யரிந்ததென் றுந்தீபற
உகிரால் அரிந்ததென் றுந்தீபற. 18

தேரை நிறுத்தி மலையெடுத் தான்சிரம்
ஈரைந்தும் இற்றவா றுந்தீபற
இருபதும் இற்றதென் றுந்தீபற. 19

திருச்சிற்றம்பலம்

அனைத்துப் பேறுகளையும் ஒருங்கே அளிக்கும் அற்புதப் பதிகம்

முதல் திருமுறை

திருஞானசம்பந்த சுவாமிகள் சீகாழியில் அருளியது

திருவெழுகூற்றிருக்கை **பண்: வியாழக்குறிஞ்சி**

திருச்சிற்றம்பலம்

ஓருரு வாயினை மானாங் காரத்(து)
ஈரிய ல்பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை
இருவரோ டொருவ னாகி நின்றனை 5

ஓரா னீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்ட மூன்றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை
ஒருதாள் ஈரயில் மூவிலைச் சூலம்

நாற்கால் மான்மறி ஐந்தலை யரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்(து)
இருகோட் டொருகரி ஈடழித் துரித்தனை
ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்

கொன்று தலத்துற அவுணரை யறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குண மிருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோ(டு)
இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை

இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமு வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை
ஒருமலை யெடுத்த இருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை யமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியு முணராக் காழி யமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்

மூன்று காலமுந் தோன்ற நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்

அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவ ரில்லை நீணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

போற்றித் திருத்தாண்டகம்

திருநாவுக்கரசு சுவாமிகள் அருளியது

திருவாரூர்

திருச்சிற்றம்பலம்

சுற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி,
அற்றவர்கட் காரமுதமானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி,
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி,
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட்ட டானனே போற்றி போற்றி. 1

வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானையீரு ரிவை போர்த்தாய் போற்றி,
கொங்கலரும் நறுங் கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோ லாடைக் குழகா போற்றி,
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமா நீழலறஞ் சொன்னாய் போற்றி,
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 2

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி,
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமே லொற்றைக்கண் ணுடையாய் போற்றி,

இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலு மேழ்பொழிலு மானாய் போற்றி,
சிலையாலன் றெயி லெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 3

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி,
மன்னியசீர் மறை நர்ன்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி,
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக்கொருவனே போற்றி போற்றி,
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி.போற்றி 4

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனேநின் பாதம் போற்றி போற்றி,
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி,
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீபோற்றி,
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 5

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி,
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி,
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி,
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 6

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான் பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி,
கொம்பனைய நுண்ணியடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி,
நம்புவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி,
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 7

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி,
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள் துணித்த மைந்தா போற்றி,
வெள்ளையேறேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கு மேலோர்க்கும் மேலாய் போற்றி,
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 8

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர்போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி,
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி,
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 9

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி,
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி,
அருமந்த தேவர்க் கரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ்,
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி 10

திருச்சிற்றம்பலம்

ஆறாம் திருமுறை

திருக்கயிலாயம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி,
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி,
ஆற்றாகு அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி,
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 1

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி,
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச் சார்புரமூன்று மெய்தாய் போற்றி
போகாதென் சிந்தைபுகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 2

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி,
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி,
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி,
கருவாகி யோடு முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 3

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி,
ஊனத்தை நீக்குமுடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி,
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி,
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 4

ஊராகி நின்ற உலகே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி,
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி,
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 5

சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி
தேவரறியாத தேவே போற்றி,
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி,

பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகைவிடாதாய் போற்றி,
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 6

பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி
பாவிப்பார் பாவமறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி,
விண்ணும் நிலனுந்தீயானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி,
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 7

இமையா துயிரா யிருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத்தணைத்தாய் போற்றி
ஊழியேழான ஒருவா போற்றி,
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி. 8

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி,
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி,
ஆவாஅடியேனுக்கெல்லாம் போற்றி
அல்லல்நலிய அலந்தேன் போற்றி,
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 9

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகலமுடையாய் போற்றி,
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன்றறியாமை நின்றாய் போற்றி,
கொடியவன் கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா என்சிந்தை கொண்டாய் போற்றி,
கடிய உருமொடுமின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 10

உண்ணா துறங்கா திருந்தாய் போற்றி
ஓதாதே வேதமுணர்ந்தாய் போற்றி,
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி,
பண்ணாரிசையின் சொற் கேட்டாய் போற்றி
பண்டே யென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகுக்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி 11

திருச்சிற்றம்பலம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருத்தொண்டத்தொகை *பண்: கொல்லி*

திருச்சிற்றம்பலம்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்யப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பற்க கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாள்தாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்

மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்ட
திருநாவுக் கரையன்றன் அடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கற் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்
நாட்டமிகு தண்டிக்கும் மூர்க்கற்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டற் கடியேன்
கார்கொண்ட கொடைகழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோன் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பொய்யடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழற் கடியேன்
மெய்யடியன் நரசிங்க முனையரையற் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்ல நம்பிக்கும் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

கடல்சூழ்ந்த உலகெலாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்குந் தஞ்சை
மன்னவனாம் செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடி
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமைகேட் டுவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பரா வாரே.

திருச்சிற்றம்பலம்

திருச்சிற்றம்பலம்

இல்லம்தோறும் திருமுறை முற்றோதல் வேள்விகளை ஏற்றுப் போற்றிய சிவபுண்ணியச் சீலர்கள்

1. 15.3.92 சிவத்திரு **ப. மூக்கப்பிள்ளை,** வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8
2. 19.4.92 **A.P.A. வெங்கடாசலம் செட்டியா**ர், சீனிவாசநகர், திருச்சிராப்பள்ளி – 5
3. 11.5.92 **க. கலியமூர்த்தி முதலியார்,** திருமங்கலம், லால்குடி.
4. 21.6.92 **T.S. வைத்திலிங்கம்பிள்**ளை, வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8
5. 19.7.92 அமரர் **மு.ஆ. அருணாசல முதலியார்,** உறையூர், திருச்சிராப்பள்ளி – 3
6. 5.8.92 **முத்தையபிள்ளை,** வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8
7. 15.8.92 **N. சுப்பராயன்,** மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி–2
8. 19.9.92 **S. ரெத்தினக்கிளியாண்டார்,** கிளியூர்.
9. 16.10.92 **C. கணபதி,** உறையூர், திருச்சிராப்பள்ளி – 3
10. 15.11.92 **ப. சிவதாணுப்பிள்ளை,** கைலாசபுரம், திருச்சிராப்பள்ளி – 14
11. 20.12.92 **வை.கி. செல்லமணி,** பெல்நகர், திருச்சிராப்பள்ளி–15
12. 25.12.92 **M. இராமச்சந்திரன்பிள்ளை,** கைலாசபுரம், திருச்சிராப்பள்ளி – 14
13. 17.1.93 **T.S. காத்தப்பெருமாள்பிள்ளை,** வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8
14. 21.2.93 **வே. சிவ இராகவன்,** திருஆனைக்கா, திருச்சிராப்பள்ளி – 5
15. 21.3.93 **T.S. வைத்திலிங்**கம், வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8
16. 18.4.93 **V. இரத்தினவேலு,** பூலோகநாதர் கோவில் தெரு, திருச்சிராப்பள்ளி – 8
17. 16.5.93 **C. நடராசன்,** உய்யக்கொண்டான்திருமலை

18. 20.6.93 **கனகசபை முதலியார்**, ஆங்கரை, திருச்சிராப்பள்ளி

19. 17.7.93 **V. ரமணி**, கைலாசபுரம், திருச்சிராப்பள்ளி – 14

20. 15.8.93 **அருள்நெறித் திருக்கூட்டத்தார்**, கைலாசபுரம், திருச்சிராப்பள்ளி – 14

21. 19.9.93 **N. கணேசப் பிள்ளை**, தென்னூர், திருச்சி

22. 17.10.93 **பன்னிரு திருமுறை மன்றத்தார்**, திருஆனைக்கா திருச்சிராப்பள்ளி – 5

23. 21.11.93 **M. குமாரலிங்கம்**, அன்புநகர், திருச்சிராப்பள்ளி

24. 19.12.93 **திருத்தலவழிபாட்டுக் குழுவினர்**, கைலாசபுரம், திருச்சிராப்பள்ளி – 14

25. 16.1.94 **வாரவழிபாட்டுக்குழுவினர்**, உறையூர், திருச்சிராப்பள்ளி

26. 20.2.94 **T.S. காத்தப்பெருமாள் பிள்ளை**, வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8

27. 20.3.94 **P. பாண்டியராஜ்**, நந்திகோவில்தெரு, திருச்சிராப்பள்ளி – 2

28. 14.4.94 **A.R. குழந்தைவேலு, A.P.A. ஜுவல்லரி**, திருச்சிராப்பள்ளி – 2

29. 15.5.94 **சிவனடியார் திருக்கூட்டம்**, திருநெடுங்களம்

30. 19.6.94 **R. சுப்பிரமணியம்**, உய்யக்கொண்டான்திருமலை

31. 17.7.94 **ப. சாமிநாதன் செட்டியார்**, பூவாளூர், திருச்சிராப்பள்ளி

32. 20.8.94 **ப. மூக்கப்பிள்ளை**, வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8

33. 21.8.94 **R. சீனிவாசன்**, வடக்கு ஆண்டார்வீதி, திருச்சிராப்பள்ளி – 2

34. 13.9.94 **V. சுவாமிநாதன்**, (U.S.A) உறையூர், திருச்சி

35. 16.10.94 **வே. அண்ணாமலை**, புத்தூர், திருச்சிராப்பள்ளி

36. 20.11.94 **மா. செயபாரதி**, மேலகல்கண்டார் கோட்டை

37. 18.12.94 **P. மாடசாமி, இரயில்வே காலனி**, திருச்சிராப்பள்ளி – 1

28. 29.1.95 T.S. **காத்தப்பெருமாள் பிள்ளை,** வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8

39. 19.2.95 M. **வெங்கடேசன்,** மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி

40. 19.3.95 **அருள்நெறித் திருக்கூட்டம்,** கைலாசபுரம், திருச்சிராப்பள்ளி – 14

41. 16.4.95 A.R. **விஜயராகவன்,** தில்லைநகர், திருச்சிராப்பள்ளி

42. 21.5.95 T.S. **வைத்திலிங்கம்,** வரகனேரி, திருச்சிராப்பள்ளி – 8

43. 18.6.95 R. **சுவாமிநாதன்,** கணபதிநகர், ஸ்ரீரங்கம்

44. 15.7.95 **உழவாரப்பணிக்குழு,** கைலாசநாதர் திருக்கோவில், வரகனேரி, திருச்சிராப்பள்ளி

45. 16.7.95 N. **கனகசபாபதி,** தில்லைநகர், திருச்சிராப்பள்ளி

46. 19.8.95 R. **சுப்பிரமணியபிள்ளை,** உய்யகொண்டான்திருமலை.

47. 17.9.95 A. **ராஜுப்பிள்ளை,** திருப்பைஞ்ஞிலி

48. 15.10.95 **சு. கலியமூர்த்தி முதலியார்,** திருமங்கலம்

49. 19.11.95 **கு. சுந்தரம்** (ஆடிட்டர்) மலைக்கோட்டை

50. 17.12.95 L. **வெங்கட்ராமன்,** B.A., உறையூர்

51. 21.1.96 T.S. **காத்தப்பெருமாள் பிள்ளை,** வரகனேரி

52. 18.2.96 K. **பழநியப்பன்,** பூவாளூர்

53. 17.3.96 **நால்வர் மன்றம்,** உய்யக்கொண்டான்திருமலை

54. 31.3.96 T.R. **தெட்சிணாமூர்த்திபிள்ளை,** சகோதரர்கள், வரகனேரி

55. 21.4.96 **பன்னிருதிருமுறை மன்றம்,** திருமங்கலம்

56. 19.5.96 S. **மோகன்,** B,A., B.L., உறையூர்

57. 16.6.96 **சிவஸ்ரீதரன்,** திருவரங்கம்

58. 21.7.96 P. **நமசிவாயம் & V. ரமணி,** திருப்பாச்சிலாச்சிரமம்

❊ ❊ ❊

பன்னிரு திருமுறையாசிரியர்கள் இருபத்தெழுவர்

"திருஞான சம்பந்தர் வாகீசர் சுந்தரர்
திருவாத வூரர் மற்றைத்
திருமாளி கைத்தேவர் சேந்தனார் கருவூரர்
தெள்ளுபூந் துருத்தி நம்பி
வருஞான கண்டரா தித்தர்வே ணாட்டடிகள்
வாய்ந்ததிரு வாலி யமுதர்
மருவுபுரு டோத்தமர் சேதிரா யர்மூலர்
மன்னுதிரு ஆல வாயார்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர்கீரர் கல்லாடனார்
ஒண்கபிலர் பரணர்மெய் யுணரிளம் பெருமானோ(டு)
ஓங்கும் அதிரா அடிகளார்
திருமேவும் பட்டினத் தடிகளொடு நம்பியாண்
டார்நம்பி சேக்கிழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத் தன்மை யோரே"

உ
சிவமயம்

இல்லங்கள் தோறும் திருமுறை

திருமுறைகள் தமிழின், சைவத்தின் கருவூலங்கள். அவை, இம்மை, மறுமை, அம்மை வாழ்விற்கு வழிகாட்டுவன. திருமுறைகளை, அவைகளுக்குரிய பண்களில் ஓதுதல் வேண்டும். திருக்கோயில்களில் மட்டும் அல்லாது இல்லங்கள் தோறும் ஆடவர் மகளிர் அனைவரும் ஓதுதல் வேண்டும்.

திருச்சிராப்பள்ளித் திருமுறை மன்றம், ஏற்றுப் போற்றுவோர் இல்லங்களில் கடந்த சில ஆண்டுகளாகத் திருமுறை முற்றோதல் வேள்விகளைத் திங்கள் தோறும் மிகவும் சிறப்பாக நடத்தி வருகிறது. திருமுறைவாணர்கள் இந்தளம் முதலான திருமுறைப் பண்களில் ஓத, புலத்துறை முற்றிய அறிஞர் ஒருவர், அரிய விளக்கம் சொல்ல, திருமுறை முற்றோதல் நிகழ்ச்சிகள் காதிற்கும் கருத்திற்கும் விருந்தாக அமைகின்றன.

திருமுறை முற்றோதல், தலமுறையாக அல்லாமல், பண்முறையாக அல்லாமல், சமய ஆசிரியர்கள் சென்ற வரலாற்று முறையாக, அன்பர்களும், அவர்களுடன் சென்று பாடிப் பரவுவது போல் நடத்தப் பெற்று வருகிறது. சைவநலஞ்சான்ற ஆடவர், பெண்டிர்களை அதில் கலந்து கொள்ள அழைக்கிறோம். திருமுறை மன்றத்தில் உறுப்பினர் ஆவீர்! திருவுடையராவீர்!

ஜோதி பிரிண்டர்ஸ், திருச்சி-2. போன்: 25416.